Tamil

# RAILS- ‘அகதியர் மற்றும் புலப்பெயர்வு சட்ட சேவை’

## தற்காலிக அகதி விசாக்கள் வைத்திருப்பவர்களுக்கான முக்கியச் செய்திகள்

<u>அறிவிப்பு</u>

தற்காலிக அகதி விசாக்களின் கீழ் இருப்பவர்களைப் பற்றிய அறிவிப்பு ஒன்றை 12 ஃபிப்ரவரி 2023, ஞாயிற்றுக் கிழமையன்று ‘புலப்பெயர்வு அமைச்சர்’ செய்தார்.

TPV அல்லது SHEV விசா ஒன்றை எப்போதாவது வைத்திருந்திருப்பவர்களுக்கு அந்த விசா இரத்து செய்யப்பட்டிருக்கவில்லை என்றால் இது பொருந்தும்.

14 ஃபிப்ரவரி 2023-இல் இருந்து ‘தற்காலிகப் பாதுகாப்பு விசா’ (TPV) அல்லது ‘பாதுகாப்புப் புகலிட முயற்சி விசா’ (SHEV) ஒன்றை வைத்திருப்பவர்களால், அல்லது இந்த விசாக்களை எபபோதாவது வைத்திருந்தவர்களால் நிரந்தர விசா ஒன்றிற்காக விண்ணப்பிக்க இயலுமாக இருக்கலாம். ‘அகதியர் மற்றும் புலப்பெயர்வு சட்ட சேவை’ (RAILS)-யின் தகவல் அமர்வு ஒன்றிற்கு நீங்கள் செல்லாத வரை, மற்றும்/அல்லது எமது சட்டதரணிகளில் ஒருவருடன் நீங்கள் பேசாத வரை நிரந்தர விசா ஒன்றிற்காக நீங்கள் விண்ணப்பிக்க வேண்டாம் என்றும் ‘திணைக்கள’த்துடன் நீங்கள் தொடர்புகொள்ள வேண்டாம் என்று நாங்கள் வலுவாய் சிபாரிசு செய்கிறோம். தவறு ஒன்றைச் செய்வது எளிது, மற்றும் உங்களுடைய விசா விண்ணப்பத்தின் மீது இது தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடும்.

<u>‘அகதியர் மற்றும் புலப்பெயர்வு சட்ட சேவை’ (RAILS)-யினால் எவ்வாறு உதவ இயலும்</u>

குயீன்சுலாந்து மாநிலத்தில், அடுத்த வாரத்தில் இருந்து (20 ஃபிப்ரவரி 2023 -இல் இருந்து) RAILS சேவை (‘அகதியர் மற்றும் புலப்பெயர்வு சட்ட சேவை’) மொழி சார்ந்த உதவியுடன் தகவல் அமர்வுகளை நடாத்தும். எமது தகவல் அமர்வுகளில், இந்த அறிவிப்பு எப்படி உங்களுக்குப்

பொருந்தும், RAILS சேவையினால் எவ்வாறு உங்களுக்கு உதவ இயலும், மற்றும் அடுத்ததாக நீங்கள் என்ன செய்யவேண்டும் என்று எமது தகவல் அமர்வுகள் நடைபெறும் பொழுது நாங்கள் உங்களுக்குச் சொல்வோம்.

இந்த வாரம் புதன் கிழமை (15 ஃபிப்ரவரி 2023)-க்குப் பிறகு https://www.rails.org.au/get-involved/events எனும் எமது வலைத்தலம் மூலமாக நீங்கள் இவற்றிற்கான முன்பதிவுகளைச் செய்துகொள்ளலாம்.

எமது வலைத்தலப் பக்கத்தில் தகவல் ஏடுகளும், தகவல்களைக் கொண்டுள்ள காணொலி ஒன்றும் இருக்கும். இவை மொழிபெயர்க்கப்பட்டிருக்கும்: https://www.rails.org.au/education/tpv-shev-conversion
Subclass 851 Resolution of Status (homeaffairs.gov.au) எனும் தமது வலைத்தலப் பக்கத்தில் 'புலப்பெயர்வுத் திணைக்கள'மும் தகவல்களைக் கொண்டிருக்கும். உங்களுக்குத் தேவைப்பட்டால், RAILS சேவை உங்களுக்கு இலவச சட்ட உதவியை அளிக்கும். உங்களுக்கு உதவுவதற்காக சட்டதரணி ஒருவருக்கு நீங்கள் பணம் செலுத்தத் தேவையில்லை.

RAILS சேவையுடன் தொடர்புகொள்ளல்

உங்களுடைய TPV அல்லது SHEV விசாவில் உங்களுடைய விசா முடிவடையும் திகதி ஒன்று இருந்தால், நிரந்தர விசா ஒன்றிற்காக விண்ணப்பிக்க உங்களுக்கு உதவுமாறு நீங்கள் எம்மைக் கேட்கலாம். பின் வரும் குழுக்களில் உள்ளவர்களுக்கு நாங்கள் சந்திப்புவேளைகளை முதலில் கொடுத்துக்கொண்டிருக்கிறோம்:

- விரைவில் விசா முடியும் நிலையில் இருப்பவர்கள்;
- 'தகுநிலைத் தீர்மானிப்பு விசா (ROSV)' ஒன்றிற்காக விண்ணப்பிப்பதற்காக தமது அடுத்த TPV/SHEV விசா விண்ணப்பத்தினை மீளப் பெறுமாறு கேட்டு 'திணைக்கள'த்திடம் இருந்து கடிதம் ஒன்றைப் பெற்றிருப்பவர்கள்;
- சட்டத்தின் s 91K -இல் உள்ள தடை அவர்களுக்காக நீக்கப்பட்டுள்ளது என்பதை அவர்களுக்குத் தெரிவிக்கும் கடிதம் ஒன்றைத் 'திணைக்கள'த்திடமிருந்து பெற்றிருப்பவர்கள் (அவசியம் கவனிக்கவும்: இப்படிப்பட்டக் கடிதம் ஒன்றை நீங்கள் பெற்றால், நீங்கள் எம்முடன் உடனடியாகத் தொடர்புகொள்ள வேண்டும்);
- 'தகுநிலைத் தீர்மானிப்பு விசா (ROSV)'விற்கான நன்னடத்தைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதில் சிரமங்கள் இருக்கக்கூடியவர்கள்; அல்லது
- 'தகுநிலைத் தீர்மானிப்பு விசா (ROSV)' ஒன்றிற்காக இணையம் மூலமாக விண்ணப்பிக்க முயற்சி செய்து 'தவறு நிகழ்ந்துவிட்டது' என்று சொல்லும் செய்தி (error message) ஒன்றைப் பெற்றிருப்பவர்கள்.

மின்னஞ்சல்: pr@rails.org.au (தெரிவுசெய்யப்படுவது)
தொலைபேசி: 07 3846 9333

## உங்களுடைய உணர்வுகள் எப்படி இருக்கின்றன என்பதைப் பற்றி பேசவேண்டிய தேவை உங்களுக்கு இருந்தால் அதற்கான ஆதரவுதவி

இந்தத் தகவல் நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்டது என்பதையும், மக்கள் மிகுந்த மன அழுத்தத்திற்கு ஆட்பட்ட நிலையில் இருக்கின்றர் மற்றும் கவலையுடன் காத்திருக்கின்றனர் என்பது எமது புரிதல். கூடிய விரைவில் இது நடந்தேறுவது இந்த செயல்முறை செயல்முறையைப் பற்றியும், இதில் அடங்கியுள்ள விடயங்களைப் பற்றியுமான நிம்மதியையும், ஆர்வத்தையும் ஆஸ்திரேலியாவில் இருப்பதற்கான வழிப்பாதை ஒன்று உள்ளவர்களுக்கு அளிக்கும் என்பது எமது புரிதலாகும். ஆஸ்திரேலியாவில் இருப்பதற்கான வழிப்பாதை ஒன்று இன்னும் இல்லாதவர்களுக்கு இந்த அறிவிப்பானது மேலதிகத் துயரத்தை அளிக்கும் சாத்தியம் இருக்கிறது என்பது எமது புரிதல்.

QPASTT சேவையின் தற்போதைய சேவைபெறுநர்கள் அவர்களுடைய QPASTT சேவகருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளுமாறு ஊக்குவிக்கப்படுகின்றனர். தடுப்பிலும், சமூகத்திலும் இருப்பவர்கள் உள்ளடங்க, வதை மற்றும் அதிர்ச்சிகளில் இருந்து பிழைத்தவர்களை, அவர்களுடைய விசா நிலை எதுவாக இருப்பினும், QPASTT சேவை தொடர்ந்து பார்த்துவரும். QPASTT சேவைகளை எவரொருவரும் நாடினால், அல்லது அவர்களது உணர்வுகளைப் பற்றி யாராவதொருவருடன் பேச விரும்பினால், பணியில் இருக்கும் அறிவுரை-ஆலோசகர் ஒருவருடன் பேச QPASTT ஆதரவுதவி இணைப்பினை திங்கள் கிழமை முதல் வெள்ளிக் கிழமை வரை காலை 9 மணியில் இருந்து மாலை 5 மணி வரைக்கும் (07) 33916677 எனும் இலக்கத்தில் அவர்கள் அழைக்கலாம்.